ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2271/8 - 2022 මාර්තු මස 14 වැනි සඳුදා - 2022.03.14

*2271/8 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 14 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு**
**அறிவித்தல்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் முறையே 44(1), 45(1) மற்றும் 47 (1) (அ) (ஆ) ஆம் உறுப்புரைகளுக்கமைய, எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால் 2020, ஓகத்து மாதம் 09 ஆந் திகதிய 2187/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலானது, காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டு, 2022 மாச்சு மாதம் 14 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்குவருமாறு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேலும் திருத்தப்படுகிறது என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது.*

**கோட்டாபய ராஜபக்ஷ,**
*சனாதிபதி.*

*சனாதிபதி அலுவலகம்,*
*கொழும்பு 01,*
*2022, மாச்சு மாதம் 14 ஆந் திகதி.*

*(1) அவ்வறிவித்தலில் இல "29.0 கைத்தொழில் அமைச்சர்" எனும் தலைப்பின் கீழுள்ள "03. அதிவிசேட முன்னுரிமைகள் மற்றும் 04. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்" பின்வருமாறு-*

**03. அதிவிசேட முன்னுரிமைகள்**

1. சகல கைத்தொழிலாளர்களும் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் குறிப்பிட்ட நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து தீர்த்து வைப்பதற்கான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்.

2. ஏற்றுமதி இறக்குமதிச் செயற்பாட்டினை இடையூறில்லாமல் மற்றும் குறைந்த காலத்துக்குள் செயற்றின் மிக்கதாக நிறைவேற்றிக் கொள்வதற்கு "தனியான ஒருங்கிணைந்த பொறிமுறையொன்றை" தாபித்தல்.

1A - G 36365 — 370 (2022/03)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3. ஏற்றுமதி தொடர்பான உற்பத்திச் செயற்பாட்டினைப் பலப்படுத்துவதற்காகச் சகல மாகாணங்களும் உள்ளடங்கும் வகையில் கொள்கைகள், வேலைத்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை உருவாக்குதலும் செயற்படுத்துதலும்

4. நடைமுறையிலுள்ள கைத்தொழில்களைப் பொருளாதாரரீதியில் பலப்படுத்துவதற்கும், முதலீட்டு வாய்ப்புகளை அதிகரித்து புதிய கைத்தொழில்துறைகளுக்கான அணுகுமுறைகளை ஏற்படுத்தத் தேவையான வழிமுறைகளைத் தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும்.

5. வீழ்ச்சியடைந்துள்ள தொழில்முயற்சிகள் மற்றும் கைத்தொழில்கள் என்பவற்றை மீளக்கட்டியெழுப்புவதற்குத் தேவையான கொள்கைகள், வேலைத்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை அறிமுகப்படுத்தலும், நடைமுறைப்படுத்தலும்.

6. உள்நாட்டு தொழில்முயற்சியாளர்கள் மற்றும் வர்த்தகர்களைப் பாதுகாப்பதும் மற்றும் அவர்களைப் பலப்படுத்துவதற்குமான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்.

7. ஏற்கனவே முதலீட்டுச் சபையுடனும் காணிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழுவுடனும் ஒருங்கிணைந்து ஏறாவூர் பிரதேசத்தில் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ள ஆடைக்கைத்தொழில் பேட்டையை ஆரம்பிப்பதற்கான சகல உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.

**04. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 1. இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை<br>2. லங்கா லேலன்ட் லிமிட்டட்<br>3. லங்கா அசோக் லேலன்ட் லிமிட்டட்<br>4. வரை. தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம்<br>5. வரையறுக்கப்பட்ட கஹகொல்ல பொறியியலாளர் சேவைகள் கம்பனி (KESCO)<br>6. மாந்தை சோல்ட் லிமிட்டட்<br>7. ஆனையிறவு உப்பளம்<br>8. ரொபோ தொழில்நுட்பத்துக்கான அதிசிறப்பு நிலையம்<br>9. வரையறுக்கப்பட்ட இலங்கை சீமெந்துக் கம்பனி<br>10. இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்<br>11. பரந்தன் இரசாயனக் கம்பனி<br>12. கஹட்டகஹ கிறைபைட் லங்கா லிமிடெட்<br>13. இலங்கை பீங்கான் கூட்டுத்தாபனம் (செங்கல் மற்றும் ஓடு)<br>14. வரையறுக்கப்பட்ட பீ.சி.சி கம்பனி<br>15. தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகார சபை | • (1969 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க) கைத்தொழில் அபிவிருத்திச் சட்டம்<br>• (1990 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க) கைத்தொழில் மேம்பாட்டுச் சட்டம்<br>• (2006 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க) தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம்<br>• (1980 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க) இலங்கை விற்பனை நிறுவனச் (கூட்டிணைக்கப்பட்ட) சட்டம் |

(2) அவ்வறிவித்தலில் இல "13.0 சுற்றாடல் அமைச்சர்" எனும் தலைப்பின் கீழுள்ள "03. அதிவிசேட முன்னுரிமைகள் மற்றும் 04. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்" பின்வருமாறு-

**03. அதிவிசேட முன்னுரிமைகள்**

1. நிலைபேறான சூழல் எண்ணக்கருவை பாடசாலைக் கல்வி தொடக்கம் சமூகத்துக்கு மத்தியில் உளப்பாங்கு ரீதியில் நிலைகொள்ளச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

2. சூழல் சார்ந்த உத்தரவுப்பத்திரங்களை வழங்கும் முறையை மீளாய்வு செய்து சூழல்சார்பான, மக்கள்சார்பான வகையில் அந்தச் செயற்பாட்டினை நடைமுறைப்படுத்தலை இலகுபடுத்தல்.

3. சூழலுக்குச் சாதகமான உற்பத்திகள் விநியோகம், போக்குவரத்துச் சேவைகள், உட்கட்டமைப்பு வசதிகள், நகர அபிவிருத்தி மற்றும் முதலீட்டுப் பொருளாதார வலய நடவடிக்கைகளை வழிநடத்தலின்போது வர்த்தக மற்றும் அபிவிருத்தித் தேவைகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுடன் இணைந்து செயற்படுதல்

4. சூழல் பாதுகாப்புக்காக நவீன தொழில்நுட்பமுறைகளை அறிமுகப்படுத்துதல்.

5. தற்போது பூமிக்கடியில் மற்றும் சமுத்திரத்தினுள் உள்ளதெனக் கருதப்படும் கனிய வளங்களை நவீன உயர் தொழில்நுட்பத்தைப் பாவித்து ஆராய்ந்து நாட்டின் உற்பத்திச் செயற்பாடுகளை வலுவூட்டுவதற்குப் பயன்படுத்துதல்.

**04. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| **திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்** | **நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்** |
|---|---|
| 1. மத்திய சுற்றாடல் அதிகாரசபை<br>2. புவிச்சரிதவியல் அளவை, சுரங்கப் பணியகம்<br>3. வரையறுக்கப்பட்ட (GSMB) தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) கம்பனி<br>4. இலங்கை கிளைமட் பன்ட் (பிரைவேட் லிமிட்டட்)<br>5. இலங்கை கனிய மணல் கம்பனி | • (1992ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க) சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டம்<br>• (1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க) தேசிய சூழல் சட்டம் |

EOG 03-0878

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.